பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

02 08 2024 **FRIDAY** **6.30 PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ஏழை மக்களின் மேம்பாட்டிற்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

2. சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பு முறை மக்களின் வரிச்சுமையை குறைத்துள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன் கூறியுள்ளார்.

3. உயர்கல்வி மாணவர் சேர்க்கையில் தமிழகம் முதலிடத்தில் உள்ளதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

4. பத்திரப்பதிவுத்துறையில் தமிழக அரசு கொண்டுவந்த 77-A, 77-B சட்டப்பிரிவுகள் தொடர்பான அரசாணை செல்லாது என சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

5. பாரிஸ் ஒலிம்பிக் துப்பாக்கிச்சுடும் போட்டியில் இந்தியாவின் மனுபாக்கர் இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<<>>>>>

ஏழை மக்களின் மேம்பாட்டிற்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

மாநிலங்களின் ஆளுநர்கள் பங்கேற்றுள்ள இரண்டு நாள் மாநாட்டை இன்று புதுதில்லியில் தொடங்கிவைத்து அவர் பேசினார்.

பழங்குடியினர் அதிகம் வசிக்கும் பகுதிகளில் ஒட்டுமொத்த வளர்ச்சியை உறுதி செய்வதற்கான பரிந்துரைகளை ஆளுநர் வழங்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

தேசிய கல்விக்கொள்கையின் செயலாக்கத்திற்கு முக்கியத்துவம் அளிக்குமாறும் அவர் வலியுறுத்தினார்.

சட்டத்துறை சீர்திருத்த நடவடிக்கைகளில் புதிய அத்தியாயமாக மூன்று குற்றவியல் சட்டங்கள் கொண்டுவரப்பட்டிருப்பதாக அவர் கூறினார்.

அன்னையின் பெயரில் ஒரு மரம் என்ற இயக்கத்தை மக்கள் இயக்கமாக உருவெடுக்க ஆளுநர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர், மத்திய அரசின் நலத்திட்டங்கள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டிய பொறுப்பும் ஆளுநர்களுக்கு உள்ளதாக கூறினார்.

கடந்த பத்தாண்டுகளில் இதுவரை இல்லாத அளவிற்கு வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் திரு ஜெக்தீப் தங்கர் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் திரு நரேந்திர மோடி, மத்திய – மாநில அரசுகளுக்கு இடையேயான நல்லுறவு நிலவுவதில் ஆளுநர்கள் முக்கிய பங்கு வகிப்பதாக குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>

பிரதமரின் கிராமப்புற சாலை மேம்பாட்டுத்திட்டத்தின்கீழ், கடந்த மூன்றாண்டுகளில் ஒரு லட்சத்து 3 ஆயிரம் கிலோமீட்டர் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், 509 மேம்பாலங்களும் கட்டப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இந்த திட்டத்தின்கீழ் நான்காம் கட்டமாக 25 ஆயிரம் ஊரகப்பகுதிகளை இணைக்கும் வகையில் சாலை வசதிகள் ஏற்படுத்தப்பட உள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

<<<<<<>>>>>

நாடு முழுவதும் 95 சதவீதத்திற்கும் கூடுதலான கிராமங்களுக்கு இணையதள வசதி வழங்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இதுதொடர்பாக, தொலைத்தொடர்புத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில், 95 கோடிக்கும் மேற்பட்டோர் இணையதள வசதியை கொண்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில், 39 கோடிக்கும் மேற்பட்டோர் ஊரகப்பகுதிகளில் வசிப்பவர்கள் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பு முறை மக்களின் வரிச்சுமையை குறைத்துள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இந்த வரி விதிப்பு முறை நடைமுறைக்கு வந்த பின்னர், கோதுமை மற்றும் சானிடரி நாப்கின்களுக்கு வரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

மொபைல் போனுக்கான வரி 31 புள்ளி மூன்று சதவீதத்திலிருந்து, 18 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

சரக்கு மற்றும் சேவை வரிவிதிப்பின் மூலம், மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் பொருட்களின் விலை குறைந்துள்ளதாக திரு எல். முருகன் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

உயர்கல்வி மாணவர் சேர்க்கையில் தமிழகம் முதலிடத்தில் உள்ளதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இன்று சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வெளிநாடுகளில் உள்ள உயர்கல்வி நிறுவனங்களில் கல்வி பயில செல்லும் 461 அரசுப்பள்ளி மாணவர்களுக்கான பாராட்டு விழாவில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

<<<<<<>>>>>

பத்திரப்பதிவுத்துறையில் தமிழக அரசு கொண்டுவந்த 77ஏ, 77பி சட்டப்பிரிவுகள் தொடர்பான அரசாணை செல்லாது என சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது

இதுதொடர்பான மனுவினை விசாரணை செய்த நீதிபதிகள் திரு எம் சுந்தர், திரு செந்தில்குமார் அமர்வு இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.

<<<<<<>>>>>

மேகதாது பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் ஒருபோதும் தீர்வுகாண முடியாது என்று நீர்வளத்துறை அமைச்சர் திரு துரைமுருகன் கூறியுள்ளார்.

வேலூர் மாவட்டம் சேமூரில் சாலை மேம்பாட்டுப்பணிகளை தொடங்கிவைத்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

இப்பிரச்சினை தொடர்பாக, கர்நாடக அரசுடன் 38 முறை பேச்சுவார்த்தை நடத்தப்பட்ட போதிலும், சுமூக தீர்வு எட்டப்படாததை அவர் சுட்டிக்காட்டினார்.

இதன் காரணமாகத்தான் தமிழக அரசு நடுவர் மன்றத்தை நாடியதாகவும் அவர் கூறினார்.

தற்போது இப்பிரச்சினை தொடர்பாக, உச்சநீதிமன்றத்தை நாடியுள்ளதாகவும் திரு துரைமுருகன் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

அத்தியவசியப்பொருளான ஆவின் பாலை கொண்டுசெல்லும் வாகனங்களுக்கு சுங்கக்கட்டணத்திலிருந்து விலக்கு அளிக்குமாறு மத்திய அரசிடம் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளதாக பால்வளத்துறை அமைச்சர் திரு மனோ தங்கராஜ் கூறியுள்ளார்

இன்று நாகர்கோவிலில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதுவரை இக்கோரிக்கை ஏற்கப்படவில்லை என்றார்.

இதன் காரணமாக, ஆவின் நிறுவனத்திற்கு பலகோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் திரு மனோ தங்கராஜ் கூறினார்.

<<<<<<>>>>>

மழை காலத்தில் சாலையில் ஏற்படும் பாதிப்புகளை உடனுக்குடன் சீர் செய்ய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு எ வ வேலு அறிவுறுத்தியுள்ளார்.

இன்று சென்னையில் இதுதொடர்பாக, அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டு அவர் பேசினார்.

"பள்ளம் இல்லாத சாலை - பாதுகாப்பான பயணம்" என்ற திட்டத்திற்கு அனைத்து பொறியாளர்களும் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

சாலையோரங்களில் போக்குவரத்துக்கு இடையூறாக உள்ள மரங்கள் மற்றும் மரக்கிளைகள் அகற்றப்பட வேண்டும் என்றும் திரு எ வ வேலு வலியுறுத்தினார்.

<<<<<<>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த இரு தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

<<<<<<>>>>>

வயநாட்டில் ஏற்பட்டதைபோன்று நீலகிரி மாவட்டத்திலும் நிலச்சரிவு ஏற்படும் என்று சமூக வலைதளங்களில் பரவி வரும் செய்திகளை பொதுமக்கள் நம்ப வேண்டாம் என்று ஆட்சியர் திருமதி லஷ்மி பவ்யா தண்ணீரு கேட்டுக்கொண்டுள்ளார்.

இன்று உதகமண்டலத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதுபோன்ற வதந்திகளை பரப்புவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரித்தார்.

<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

பெரம்பலூர் மாவட்டம் குன்னம் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் விலையில்லா மிதிவண்டிகளை மாநில அமைச்சர் திரு சிவசங்கர் மாணவிகளுக்கு வழங்கினார்.

---------------

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மழைநீர் சேமிப்பு குறித்த விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் இன்று தொடங்கிவைத்தார்.

---------------

திருவள்ளூர் மாவட்டம் ஆவடியில் நகை வியாபாரிகளுக்கான ஹால்மார்க்கிங் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

பாரிஸ் ஒலிம்பிக் துப்பாக்கிச்சுடும் போட்டியில் இந்தியாவின் மனுபாக்கர் இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் 25 மீட்டர் தரவரிசை போட்டியில் பெற்ற கூடுதல் புள்ளிகளின் அடிப்படையில் அவர் இறுதிச்சுற்றுக்கு முன்னேறினார்.

-----------------

வில்வித்தை போட்டியில் இந்தியாவின் அங்கிதா பகத் - **Dhiraj** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

கலப்பு இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை ஸ்பெயின் இணையை வென்றது.

-----------------

ஹாக்கிப்போட்டியில் இந்தியா 3-2 என்ற கோல் கணக்கில் ஆஸ்திரேலியாவை வென்றது.

கேப்டன் ஹர்மன் பிரீத் சிங் இரண்டு கோல் அடித்தார்.

---------------

இலங்கைக்கு எதிரான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வெற்றிபெற 231 ரன் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

பள்ளி மாணவர்களுக்கான மாநில அளவிலான ஹாக்கிப்போட்டி மன்னார்குடியில் இன்று தொடங்கியது.

<<<<<<END>>>>>